**11.03.2026**

**O.S.No.111/2001 and 48/2005**

**பி.வா.சா.2 : சிவானந்தம்**

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>**:-**

1) எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட தென்னங்குடிபாளையம், அப்பம்மசமுத்திரம் மற்றும் நரசிங்கபுரத்தில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் எனக்கு பாத்தியப்பட்டது என்று தான் சொல்லி உள்ளேன். தென்னங்குடிபாளையம், அப்பம்மசமுத்திரம் உள்ள சொத்துக்கள் விவசாய நிலங்கள் என்றால் சரிதான். நரசிங்கபுரத்தில் உள்ள சொத்து வீடு என்றால் சரிதான். தென்னங்குடிபாளையம், அப்பம்மசமுத்திரம் உள்ள விவசாய நில சொத்துக்கள் 2004 ல் எனக்கு உயில் எழுதி வைத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். உயில் எழுதி வைத்த சின்னப்பிள்ளை எப்போது இறந்தார் என்றால் 07.10.2004 ல் இறந்துவிட்டார்.

2) மேற்படி சின்னப்பிள்ளை இறந்து இவ்வளவு வருடம் கழித்தும் இது நாள் வரை பட்டா சிட்டா முதலிய ஆவணங்கள் என் பெயரில் மாற்றம் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு நிலுவையில் உள்ளதால் வருவாய் துறை ஆவணங்கள் மாற்ற முடியாது என்று சொல்லி விட்டார்கள். இத்ததன வருடம் நான் அனுபவித்து வருவதாக சொல்வதற்கு அனுபவ சான்றிதழ் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு நிலுவையில் உள்ளதால் கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். மேற்படி சொத்திற்கு தீர்வை எதுவும் போட்டேனா என்றால் இல்லை. சின்னப்பிள்ளை பெயரிலும் தீர்வை செலுத்தவில்லை. சின்னபிள்ளைக்கு 4 மகன்கள் என்றால் சரிதான். மேற்படி மகன்களில் 1 மகன் தர்மலிங்கத்தின் மகன் தான் நான்.

3) நான் தென்னங்குடிபாளையத்தில் உள்ள சொத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். தென்னங்குடிபாளையம், அப்பம்மசமுத்திரம் உள்ள சொத்துக்கள் விவசாய நிலங்கள் அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைக்கவில்லை. அவ்வாறு நான் எந்த அசல் ஆவணங்களையும் ஒப்படைக்கவில்லை என்றும் வழக்கிற்காக ஒப்படைத்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி உயில் சாசனம் பதிவு செய்யப்படாத உயில் என்றால் சரிதான். எனது அம்மாவிற்கு கல்ராயன்மலையில் உறவினர்கள் யாரும் இல்லை. மேற்படி உயில் சாசனத்தில் சாட்சி கையெழுத்து போட்ட நபர்கள் எனது நண்பர்கள் என்றால் அவர்கள் என்னிடம் துணி தைக்க வருபவர்கள்.

4) எனது அப்பாவுடன் பிறந்த 3 பேர்களும் தென்னங்குடிபாளையத்தில் குடும்ப சொத்தில் உள்ளார்கள் என்று சொன்னால் தென்னங்குடிபாளையத்தில் தான் உள்ளார்கள். தென்னங்குடிபாளையம், அப்பம்மசமுத்திரம் உள்ள சொத்துக்கள் மீது ரங்கநாதன் பாகப்பிவினை வழக்கு தாக்கல் செய்து 1/4 பாகம் தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான். 05.04.2025ல் அ.வ.எண்.95/2003 ல் நான் சாட்சியம் அளித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி நான் சாட்சி அளித்தேன் என்றால் சரிதான். அதில் என்னை எதிர்தரப்பினர் குறுக்கு விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி குறுக்கு விசாரணையில் நரசிங்கபுரத்தில் உள்ள வீட்டில் ரங்கநாதன் தான் குடியிருந்து வருகிறார் என்று தான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் அவ்வாறு சொன்னதாக ஞாபகம் இல்லை.

5) மேற்படி சாட்சிய ஆவணம் **வா.சா.ஆ.**10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நரசிங்கபுரம் சொத்தில் நான் குடியிருந்து வருவததாக சொல்வதற்கு நான் எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு நிலுவையில் உள்ளதால் தர முடியாது என்று சொல்லி விட்டனர். நரசிங்கபுர சொத்து வீடு என்பதால் அதற்கு மாதம் தோறும் மின் கட்டணம், குடிநீர் வரி, வீட்டு வரி முதலியவற்றை

செலுத்த வேண்டும் என்று சொன்னால் சரிதான். நரசிங்கபுர சொத்திற்கு மாதம் தோறும் கட்டணம் செலுத்துவதற்கு ரசீது எதுவும் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாயார் பெயரிலும் நான் செலுத்தவில்லை.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.03.11 16:39:08 +0530

**Subordinate Judge, Attur.**